புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **06 ஜூன், 2022**

# பத்திரிகை செய்தி

புதுச்சேரி, தேசிய மாணவர் படை இயக்குநரகத்தின் சார்பில் நடைபெறும் கடற்படைப் பிரிவு மாணவர்களின் கடல் சாகசப் பயணத்தை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் இன்று(06-06-2022) தேங்காய்த்திட்டு மீன்பிடித் துறைமுகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு தட்சிணாமூர்த்தி மற்றும் தேசிய மாணவர்ப் படை அதிகாரிகள் உடனிருந்தனர்.

புதுச்சேரி-தமிழகத்தைச் சேர்ந்த தேர்வு செய்யப்பட்ட 60 மாணவர்கள் இதில் கலந்து கொள்கின்றனர். இந்த குழு 300 கிமீ கடற் பயணமாக புதுச்சேரியிலிருந்து புறப்பட்டு காரைக்காலை அடைந்து மீண்டும் புதுச்சேரியை வந்தடையும்.

நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர்,

- கடல் சாகசப் பயணத்தில் கலந்துகொள்ளும் மாணவர்கள் கடற் பயணம் செல்வது மட்டுமல்லாமல் கடற்கரையோர கிராமங்களில் சமூக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரத்த தான முகாமில் கலந்த கொள்ளுதல், முதியோர் இல்லங்களைப் பார்வையிடுதல், மரங்கள் நடுதல், கடற்கரையை தூய்மைப்படுத்துதல், விழிப்புணர்வு பேரணிகள் நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.
- இந்த கடற்பயணக் குழவில் 25க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொள்கிறார்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. அவர்கள் மற்ற பெண்களுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள்.
- 20 நாட்களுக்கு மேலாக 25 பெண்கள் கடற் பயணம் செய்வது என்பது சாதாரண விஷயமல்ல. அவர்கள் பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதிக பாதுகாப்பு தேவைப்படும். கடற்படை மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியை கொடியசைத்துத் தொடங்கி வைப்பதில் பெருமை அடைகிறேன்.
- குடியரசு தினத்தன்று மாண்புமிகு பாரதப் பிரதமரின் கரங்களால் வழங்கப்படும் சிறந்த அணிவகுப்பிற்கான கோப்பையை புதுச்சேரி கடற்படைப் பிரிவு பெற்று வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.
- புதுச்சேரியில் ஒரு முறை பயன்பாட்டு நெகிழி (பிளாஸ்டிக்) தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த இரண்டு மூன்று நாட்களாக பொது இடங்களில் பல லட்சம் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களை அப்புறப்படுத்தி கொண்டிருக்கிறோம்.
- நெகிழி பூமிக்கு மிகவும் பாரமாக இருக்கிறது. சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடும் சூழலில், நெகிழி இல்லாத உலகமே வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கும் ஆரோக்கியமான பரிசாக இருக்கும். இந்த மாணவர்கள், பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

என்று குறிப்பிட்டார்.